# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

### <u>புலம்பெயர்ந்த சிறுவர்களுக்கான புலமைப்பரிசில்</u>

2006-07 ஆம் ஆண்டுகளிலிருந்து புலம்பெயர்ந்த சிறுவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டம் [SPDC] நடைமுறைப்படுத்தப்பட்டுவருகிறது. இந்த திட்டத்தின்கீழ் இந்தியாவை பூர்வீகமாகக் கொண்டவர்கள்(PIOs) மற்றும் இந்தியாவில் வதியாத இந்தியர்கள்(NRIs), இந்திய பல்கலைக்கழகங்கள்/நிறுவனங்களில் பட்டப்படிப்பினை மேற்கொள்ள இதன் மூலமாக நிதி உதவிகள் வழங்கப்படுகின்றன. தொழில்சார்ந்த மற்றும் தொழில்முறைசாராத சகல துறைகளையும் உள்ளடக்கியதாக இந்த SPDC திட்டம் அமைந்துள்ளது.

2. மேலும், புதுமுக (முதலாம் வருடம்) மாணவர்கள் மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்க முடியும். அத்துடன் இந்த புலமைப்பரிசில் தொடர்பான விரிவான தகவல்களை http://www.spdcindia.gov.in என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளமுடியும். இலங்கையிலுள்ள தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகள் 2024 நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இணையத்தளம் ஊடாக நேரடியாக விண்ணப்பிக்குமாறு கோரப்படுகின்றீர்கள்.

*******

**கொழும்பு**
**30 ஒக்டோபர் 2024.**